# சார்பு நீதிமன்றம், ஓமலூர்

SC.No.203/2021

நாள். 26.09.2025

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 26.09.2025ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | :.அ.சா.1 | ஜாதி | :----------- |
| பெயர் | சக்திவேல் | தொழில் | : |
| த/பெ. | : | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**(Accused present)**

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது சேலத்தில் குடியிருந்து பாதுகாவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2019ம் ஆண்டு தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தில் சேலம் கோட்டத்தில் ஓமலூர் டிப்போவில் ஓட்டுநராக பணி செய்து வந்தேன். என்னுடைய ஓட்டுநர் எண்.9324 ஆகும். 22.03.2019ம் தேதி TN 30 N 0859 என்ற டவுன் பஸ், ரூட் நெம்பர் 98 பேருந்திற்கு என்னை ஓட்டுநராகவும், நடத்துனர் மார்கண்டையன் என்பவரையும் பணி நியமனம் செய்தார்கள்.

2. அன்று மாலை 7.30 மணிக்கு சேலம் பழைய பேருந்து நிறுத்ததில் இருந்து டிரப் எடுத்து கொண்டு ஓமலூர் வழியாக தொளசம்பட்டி சென்று கொண்டிருந்தபோது ஓமலூர் மேச்சேரி பிரிவு சாலையில் பின்னர் பெயர்

கேட்டு தெரிந்து கொண்ட அஜீத் என்பவர் பின் படிக்ட்டில் ஏறி டிக்கெட் எடுக்கமாட்டேன் என்றும் படிக்கட்டை விட்டு மேலே ஏறமாட்டேன் என்று வாக்குவாதம் செய்ததால் ரயில்வே கேட் அருகே அவரை சமாதனம் செய்து பேருந்தில் இருந்து இறக்கிவிட்டோம்.

3. பின்னர் 8.40 மணி சுமாருக்கு நான் பேருந்தை ஓட்டிக்கொண்டு பஞ்சுகாளிப்பட்டி பாலா சில்க்ஸ் அருகே சென்று கொண்டிருந்தபோது இருசக்கர வாகத்தில் மூன்று பேர் (அஜீத், ராஜீவ்காந்தி, விவேகனாந்தன் பின்னர் பெயர் விசாரித்து தெரிந்து கொண்டேன்.) வந்து பேருந்திற்கு முன்னால் வந்து வண்டியை நிறுத்தி கல்லை எடுத்து பேருந்தின் முன்புற பெரிய கண்ணாடியை அடித்து உடைத்துவிட்டார்கள்.

4. பின்னர் 3 பேரும் பேருந்திற்குள் ஏறி கையால், கண்ணம், நெஞ்சு, முதுகு ஆகிய பகுதிகளில் குத்தினார்கள். பின்னர் நடுவழியில் இறக்கிவிட்டால் குத்தி கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள். பின்னர் நடத்துனர் உதவியுடன் மருத்துவமனைக்கு சென்றேன். அந்த கண்ணாடியின் மதிப்பு சுமார் 6000ல்இருந்து 7000ம் வரை இருக்கும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி இருப்பவர்கள் தான் மேற்படி எதிரிகள் ஆவார்கள்.

5. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போதுஎன்னிடம் காட்டப்படும் கல்லால் தான் பேருந்தின் கண்ணாடியை உடைத்தார்கள். அந்த கல் **ச.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தற்போது என்னிடம் காட்டப்படும் கண்ணாடி தான் பேருந்தில் இருந்து உடைந்த கண்ணாடி ஆகும். அந்த கண்ணாடி **ச.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

6. நான் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சேர்ந்தேன் என்றால் 9.45 – 10.00 மணிக்குள் இருக்கும். 22.03.2019ம் தேதித்திய இரவாக என்றால் ஆமாம். நான் மருத்துவரிடம் 5 நபர்கள் கண்ணாடியை தாக்கியதாக சொல்லியிருக்கிறேன் என்றால் 3 பேர் தான் உடைத்தார்கள். வாய் தவறி 5 பேர் என்று சொல்லிவிட்டேன். நான் மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்ததாக சொல்லும் நிலையில் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் 23.03.2019ம் தேதி அதிகாலை 1 மணி சுமாருக்கு விசாரித்தார்கள்.

2. போலீசார் சுமார் 1 மணி நேரம் விசாரித்திருப்பார்களா என்றால் இருக்கலாம். அதன் பிறகு என்னை மீண்டும் விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் புகார் 4 1/2மணி நேரம் காலதாமதமாக கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு முன்னால் குடிபோதையில் எதிரி அஜீத் தகராறு செய்ததாக சொல்லும் நிலையில் அந்த இடத்தின் பெயர் என்னவென்றால் நான் இந்த ஊருக்கு புதிது எனவே ஊர் பெயர் நினைவில்லை. பிரதான சாலையில் இருந்து ஓமலூரிலிருந்து இரயில்வே கேட்டிற்கு இரண்டு கிலோ மீட்டருக்கு முன்பு சாலையின் வலது புறமாக ஒரு பேருந்து நிறுத்தத்தில் நடந்தது. அந்த பேருந்து நிறுத்தத்தின் பெயர் நினைவில்லை.

3. போலீசாரிடம் எதிரி மேச்சேரி பிரிவு சாலையில் தகராறு செய்யதாக சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம்.

நான் போலீசாரிடம் மேற்கண்டவாறு சொல்லியிருந்தால் இப்போதும் இதுகுறித்து சொல்லியிருப்பேன் என்றாலும் போலீசாரே வழக்கிற்காக எழுதி கொண்டார்கள் என்றாலும் சரியல்ல. நான் சம்பவத்திற்கு முன்னர் 10 மாதமாக அதே வழிதடத்தில் தான் பேருந்தை இயக்கினேன் என்றால் சரியல்ல. ஓமலூர் டிப்போவில் இருந்து பல்வேறு ஊர்களுக்கு பேருந்தை இயக்கினேன் ஒரே வழிதடத்தில் செல்லவில்லை.

4. நான் ஏற்கனவே அந்த வழி தடத்தில் பேருந்தை ஓட்டி இருக்கிறேனா என்றால் 6 வருடம் ஆகிவிட்டது எனவே நினைவில்லை. மேச்சேரி பிரிவு ஒரு சம்பவயிடம் என்றாலும், பாலா சில்க்ஸ் ஒரு சம்பவயிடம் என்றாலும் ஆமாம். ஒரு சம்பவயிடமான மேச்சேரி பிரிவு அருகே பேருந்தில் கூட்டமாக இருந்ததா என்றால் இல்லை 20, 30 பேர் இருந்திருப்பார்கள். முதல் சம்பவயிடமான மேச்சேரி பேருந்து பிரிவில் எனக்கும் எதிரிகளாக சொல்லப்படும் நபர்களுக்கும் பிரச்சனையா அல்லது நடத்துனருக்கும், எதிரிகளாக சொல்லப்படும் நபர்களுக்கும் இடையே பிரச்சனையா என்றால் ஆரம்பத்தில் நடத்துனருக்குதான் அஜீத்தோடு பிரச்சனை.

5. அதற்கு பிறகு நடத்துனர் பேச்சை கேட்ககாததால் வண்டியை நிறுத்தி பொதுமக்கள் உதவியுடன் அவரை சமதானம் செய்துவிட்டு இறக்கிவிட்டேன். அப்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 8.5, 8.10 இருக்கலாம். 1ம் எதிரியை மேச்சேரி பிரிவு சாலையில் இறக்கிவிட்ட சொல்லப்படும் இடத்திற்கும், பாலா சில்க்ஸ்ற்கும் இடையே 4 கிலோ மீட்டர் தூரம் இருக்குமா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை.

6. 1ம் எதிரியை இறக்கிவிட்டு பேருந்து சென்று கொண்டேதான் இருந்தது என்றால் ஆமாம். தொளசம்பட்டிக்கும் போய் சேர்ந்துவிட்டது என்றால் இல்லை. மாற்றுபேருந்தில் பயணிகளை தொளசம்பட்டி செல்ல

ஏற்றிவிட்டோம். மாற்று பேருந்து மூலமாக பயணிகளை ஏற்றி விட்டது குறித்து போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் 6 வருடம் ஆனதால் மறந்துவிட்டது.

7. அதே பேருந்தின் மூலமாக தான் பயணிகளை தௌசம்பட்டியில் இறக்கிவிட்டோம் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாற்று பேருந்தில் ஏற்றிவிட்டிருந்தால் நான் உடனே மருத்துவமனைக்கு சென்றிருப்பேன் என்றால் சரியல்ல.

8. எனக்கு எதிரிகளில் யார் அஜீத், யார் விவேகானந்தன், யார் ராஜீவ்காந்தி என்று தெரியாது என்றால் சம்பவத்தின்போது தெரியாது. பின்னர் விசாரித்து தெரிந்து கொண்டேன். போலீசார் விசாரித்த பிறகு தான் எனக்கு எதிரிகளின் பெயர்தெரியவந்தது என்றால் ஆமாம். போலீசார் தான் எதிரிகளின் பெயரை சொன்னார்கள். எனக்கு யார் அஜீத், யார் விவேகானந்தன், யார் ராஜுவ்காந்தி என்று சொல்ல முடியுமா என்றால் முதலில் நிற்பவர் அஜீத், மற்ற இருவரின் அடையாளம் தற்போது மறந்துவிட்டது.

9. முதல் சம்பவயிடத்தில் இருந்து இரண்டாவது சம்பவயிடத்திற்கு பேருந்தில் செல்ல எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 15 நிமிடம் ஆகும். சம்பவயிடத்தில் பல கல் இருக்கும் நிலையில் ச.பொ.1 ஐ எவ்வாறு அடையாளம் சொல்கிறேன் என்றால் அந்த கல் கண்ணாடியை உடைத்துவிட்டு எனது சீட்டிற்கு அருகே வந்து விழுந்தது எனவே தெரியும். எத்தனை கல் கிடந்தது என்றால் ஒரே கல்தான். எங்கு கிடந்தது என்றால் பேருந்திற்குள் கிடந்தது. பேருந்தை எப்போது எடுத்து சென்றோம் என்றால்எனக்கு தெரியவில்லை.

10. என்னை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றது என்றால் நடத்துனர் அழைத்து சென்றார். எவ்வாறு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றோம். அந்த சமயத்தில் நடத்துனரிடம் இருசக்கர வாகனம் இல்லை என்றாலும் நான் அதே பேருந்தில்தான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல உண்மையாகவே சம்பவம் நடந்திருந்தால் நடத்துனர் தான் புகார் கொடுத்திருப்பார் என்றாலும் ஓட்டுநரான எனக்கு புகார் கொடுப்பதற்கான வாய்ப்பே இல்லை என்றாலும் சரியல்ல. அடிப்பட்டது நான் எனவே நான் புகார் கொடுத்தேன்.

11. எத்தனை நாட்கள் நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன் என்றால் ஓமலூர் மருத்துவமனையில் 3 நாட்களும், கோயமுத்தூர் சி.எம்.சி மருத்துவமனையில் 1 மாதமும் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். நான் 1 மாதம் சிகிச்சை எடுத்துகொண்டதற்காக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

12. எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் எனக்கு சாதாரண காயம் என்று சொல்லி சான்று கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. பேருந்தின் கண்ணாடி விரிசல்விட்டதா என்றால் உடைந்து சிதறிவிட்டது. நான் உடனே மருத்துவமனைக்கு சென்றுவிட்டதால் அந்த கல் பேருந்திற்குள்ளேயே இருந்ததா என்று தெரியாது என்றால் சரிதான்.

13. அப்பாவிகளான எதிரிகள் மீது பொய்யாக வழக்கு போட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. இரண்டாவது சம்பவயிடத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 30, 40 பேர் இருந்திருப்பார்கள்.

நான் சொல்வதுபோல் 30, 40 நபர்கள் இருந்திருந்தால் என்னை எதிரிகள் தாக்குவதற்கு வாய்ப்பில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த குற்றச்சாட்டிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/–த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.

**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**

SC.No.203/2021

நாள். 26.09.2025

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 26.09.2025ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | :.அ.சா.2 | ஜாதி | :----------- |
| பெயர் | பெரியண்ணன் | தொழில் | : |
| த/பெ. | : | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**(Accused present)**

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது நச்சுவாயனூரில் குடியிருந்து நெசவு தொழில் செய்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 22.03.2019ம் தேதி இரவு 8.45 சுமாருக்கு நான் எனது பால் கடையில் இருந்தேன். அப்போது எனது கடைக்கு வெளியே 20 மீட்டர் தள்ளி கிழபுறமாக சத்தம் கேட்டது. அப்போது எனது பால் கடையில் 4, 5 நபர்கள் பால் ஊற்றிக்கொண்டிருந்தார்கள். நான் பால் வாங்கிவிட்டு 5 நிமிடம் கழித்து வெளியே வந்து பார்த்தேன். அப்போது தெரியாத 4, 5 பேர், டிரைவரை அடித்துவிட்டார்கள் என்று கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தார்கள். அங்கு ஓட்டுநரும், நடத்துனரும் அங்கு இல்லை. அடித்த நபர்களும் இல்லை.

2. பின்னர் விசாரித்தபோது 98ம் நெம்பர் அரசு பேருந்து கண்ணாடியை உடைத்துவிட்டதாக சொன்னார்கள். பேருந்து கண்ணாடி பேருந்திற்கு கீழ் உடைந்து கிடந்தது. மறுநாள் 23.03.2019ம் தேதி காலை 6 மணிக்கு எனது கடைக்கு வந்தபோது போலீசார் சம்பவயிடத்தை பார்த்து விசாரித்து கொண்டிருந்தார்கள். போலீசார் சம்பவயிடத்தை பார்த்து படம் வரைந்து மகஜர் தயார் செய்தார்கள்.

3. அப்போது அங்கிருந்த என்னிடமும், ஓட்டல் கடை வைத்திருந்த இன்னொரு நபரிடமும் போலீசார் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வதுகையெழுத்து என்னுடையது தான் அந்த பார்வை மகஜர் அ.சாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் அந்த இடத்தில் உடைந்திருந்த கண்ணாடி துண்டுகளை ஆதரத்திற்காக எடுத்து கொண்டார்கள். அதற்காகவேண்டி எங்களிடம் கைப்பற்றுதல் மகஜரில் கையெழுத்து வாங்கினார்கள். நாங்கள் இருவரும் அதிலும் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்தோம்.

3. தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான் அந்த கைப்பற்றுதல் மகஜர் உள்ள 2வது கையெழுத்து மட்டும் **அ.சாஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. நான் போலீசார் விசாரணையில் கடந்த 22.03.2019ம் தேதியன்று இரவு 8.40 மணிக்கு நான் எனது கடையில் இருந்தபோது TN 30 N 0859 என்ற டவுன் பஸ் ரூட் எண்.98ஐ மூன்று பேர் வந்து பஸ்ஸை வழிமறைத்து

தகராறு செய்த சத்தம் கேட்டு நான் போய் பார்த்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

5. அப்போது அதில் ஒருவன் கீழே கிடந்த கல்லை எடுத்து பஸ்ஸின் முன்பக்க கண்ணாடியை உடைத்துவிட்டான் என்றும் அந்த மூன்று பேரும் பஸ்ஸின் உள்ளே நுழைந்து பஸ் டிரைவரை மாறி மாறி கையால் அடித்து இதே போல் எங்களை வழியில் இறக்கிவிட்டால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு ஓடிவிட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

6. பின்னர் நாங்கள் அ.சா.1ஐ சிகிச்சைக்காக ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது அரசு தரப்பு வழக்கிற்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் அ.சா.ஆ.2, 3ல் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் ஒரு கையெழுத்துதான் போட்டேன் என்றால் ஆமாம். நான் சம்பவயிடத்தில் வைத்து ஒரு கையெழுத்து தான் போட்டேன் என்றால் ஆமாம். ஒரே நாளில் இரண்டு பேப்பரில் கையெழுத்து போட்டேன். காவல் நிலையத்தில் போன வாரம் வரச்சொல்லியிருந்தார்கள் அங்கு சென்று ஒரு கையெழுத்து போட்டேன். ஒரே நாளில் இரண்டு கையெழுத்து போட்டேனா என்றால் ஆமாம்.

2. முதல் கையெழுத்திற்கும் இரண்டாவது கையெழுத்தும் இடையே எவ்வளவு நேரம் இடைவெளி இருக்கும் என்றால் சுமார் 1 மணி நேரம் இருக்கலாம். நான் கையெழுத்து போட்டதாக சொல்வது உண்மையாக இருந்திருந்தால் என்னோடு கையெழுத்து போட்டவரின் பெயரையும்

சொல்லியிருப்பேன் என்றாலும் என்னோடு கையெழுத்து செய்த நபரின் பெயர் தெரியாததில்லிருந்தே நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று தெரியவருகிறது என்றால் சரியல்ல. அவர்பெயர் மட்டும் தான் சரியாக தெரியவில்லை.

3. இரண்டாவது கையெழுத்து எதற்காக நான் போட்டேன் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். முதல் கையெழுத்தை சம்பவயிடத்தை எங்கள் முன்னிலையில் பார்த்ததற்காகவும், இரண்டாவது கையெழுத்தை அந்தஇடத்தில் இருந்த கண்ணாடி, கல்லை எடுத்தற்காகவும் போட்டேன். போலீசார் என்னை விசாரித்தபோது நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றுதான் சொன்னேன் என்றால் ஆமாம். போலீசார் கல்லை எங்கிருந்து எடுத்தார்கள் என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/–த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.